Registered as a News
Paper in Ceylon
P M G No. H A
80/300 of 1939,

# இந்துசாதனம்

விரோதி வருஷப்
( 1889 )
ஆவணி மாதம்
28 ம் உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது


மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத்-௬௩] யாழ்ப்பாணம்:- கரஹு புரட்டாதிமீ ௨௬ உ வெள்ளிக்கிழமை (12 அக்டோபர் 1951) [இல.- ௹௨]

## திருவடி

[குடந்தை ஸ்ரீ மங்களாம்பிகா நூல் நிலையத்தில்
தருமபுர ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் நிகழ்த்திய விரிவுரை]

I



சிவனடியார்கள் அடையும் பேறு திருவடிப்பேறு. திருவடி என்பது திருவருள்; அது சிவசக்தி. சைவத்தின் முத்திநிலையும் அது. திருவடி நிழலை அடைந்தார்கள் என்று கூறுவதையும் கேட்டிருப்பீர்கள். திருவடியைப்பற்றி அன்பர் சொல்லுகிறார். அவர் யார்? அப்பர் அடிகள். எப்படி? தக்கயாகத்திலே யாகத்தை அழிப்பதற்காகத் தூக்கப்பட்டதாம். அதே யாகத்தில் சந்திரனைத் தேய்ப்பதற்காகத் தூக்கியதும் அதனையே. ஒரு பதினறு வயது இளம்பாலகன் மார்க்கண்டேயன். அவனுடைய உயிரைக் காப்பதற்காக யமனை உதைக்கத் தூக்கப்பட்டதும் அதுவே. இந்தத் திருவடியின் பெருமையை அறியாத இரண்டு பேரில் ஒருவர் வராகம் ஆனார். மற்றொருவர் அன்னப் பறவையாகப் பறந்தார். நீங்கள் நினைக்கலாம், அன்னப் பறவையாகப் பறந்தபோது முடியைத்தானே காணப் போனார் என்று. இறைவனின் திருவடிகள் இருந்த உயரங்கூட அவரால் காண முடியவில்லை. அவர் காண முயன்றதும் அடியைத்தான். அதனாலேயே திருவடியை அயனும் பிரமனும் தேடினார்கள் என்று சொல்லுகிறார்கள். மேலும் பாருங்கள். அன்னம் தேடவேண்டியது எதனை? தாமரையை. தாமரை எது? அதுதான் திருவடித்தாமரை. அந்த அன்னம் திருவடித் தாமரையை விட்டுவிட்டுச் சடைக்காட்டைத் தேடிச்சென்றது. பன்றி தேடவேண்டியது காட்டை. அதைவிட்டுத் தாமரையைத் தேடிச் சென்றது. இப்படி மாறிச் சென்றதால் அறிய முடியவில்லை. வழி தவறிப்போனதால் திருவடியை அடைய முடியாமல் தவித்தார்கள். தடிப்பு ஏறிய காலத்தில் தாளடைய முடியாதது தானே!

இப்படி, தேவர்களுக்கும் வேதத்திற்கும் எல்லாம் அருமையான திருவடி நமக்கெல்லாம் இலேசாகக் கிடைத்து விடுகிறதாம். எப்படி? ஞானசாரியன் திருவருள் இருந்தால் போதும். 'ஆசான் அருளால் அடி சேர்ஞானம் வந்திடும்; மற்றொன்றினும் வாராது' என்று சித்தியார் சொல்லுகிறது. சிதாகாச க்ஷேத்திரமாகிய சிதம்பரத்திலே சித்சபையிலே உலகமெல்லாம் அசைய ஐந்தொழில் செய்ய ஆட எடுத்ததும் அந்தத்திருவடிதான்; அதுதான் உங்களையும் என்னையும் உலகத்தையும் ஆட்கொண்டது. இதுதான் திருவடிப் பெருமை. மறக்கருணை காட்டியும், அறக்கருணை காட்டியும் ஆட்கொள்ளுதலாகிய இரண்டுமே திருவருள் மயமாகிய திருவடி செய்யும் வேலை. இதைத்தான் சொல்லுகிறார் நமது அப்பரடிகள்; எப்படி?

திருச்சிற்றம்பலம்

சாட எடுத்தது தக்கன்றன்
வேள்வியிற் சந்திரனை
வீட எடுத்தது காலனை
நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது தில்லையுட்
சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதமன்றோ
நம்மை ஆட்கொண்டதே.

திருச்சிற்றம்பலம்

இதுமட்டுமா? மற்றொரு இடத்திலே சொல்லுகிறார்; அதனையும் பாருங்கள். சேஷசயனத்திலே அறிதுயில் கொள்ளுகிறார் திருமால். அவர் இடைவிடாது சிந்தித்து ஆராதிக்கின்ற அடியும் அது. அம்மட்டோ, பிரமன் தன்னுடைய தலைக்கு அணியாக, இந்த அடியை ஆக்கிக் கொள்ளுகிறான். கலியுகத் தெய்வமாக விளங்குகின்ற முருகன் கை தொழுது இதனை அடைகின்றார். மேலும் இத்தகைய திருவடி அன்போடு அடைந்தவர்களுக்கு எல்லாம் அடைக்கலத் தானமாய் விளங்குகிறது. இடைவிடாமல் தோத்திரிப்பவர்களின் பாவங்களெல்லாம் ஓடுகின்றன. பதினெண் கணங்கள் பாடிப் போற்றுகின்றன. இது வீட்டானத்து இறைவன் திருவடியின் பெருமை. இதிலே ஒரு நயம். சார்ந்தவர்களுக்கு அடைக்கலத் தானமாய் இருப்பது; தோத்திரிக்கின்றவர்களுக்குப் பாவத்தைப் போக்குவது என்ற இரண்டையும் இணைத்துப் பாருங்கள். சார்தல் முதல்வேலையும், பரிவது அடுத்தன்னதொண்டும் ஆகும். சார்ந்தால் அல்லது பரிவு உண்டாகாது என்ற சம்பிரதாயத்தையும் இவர் அறிவிப்பது நமக்கு எல்லாம் பெரிய வியப்பல்லவா! மற்ற ஒரு சிறந்த கருத்தையும் பாருங்கள். நமக்குப் பரமாசாரியாகிய முருகப்பெருமான் இத் திருவடியைச் சார்ந்து காட்டுகின்றார். இதைப் பார்த்த நாமும் திருவடியைச் சேரவேண்டும். சேர்ந்த பிறகு பரியவேண்டும். இந்த முறை இதில அமைந்திருப்பது நம்முடைய சைவ சம்பிரதாயத்தைக் காட்டுகிறது. அந்தப்பாடலைப் பாருங்கள்:-

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

## தோத்திரம்

திருச்சிற்றம்பலம்

பண் - தக்கராகம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பம்
துன்ப னென்று தருளே துணையாக
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற்
றப்பர் சோற்றுத் துறைசென்று அடைவோமே.

அந்தண் சோற்றுத் துறையெம் ஆதியைச்
சிந்தை செய்ம்மி னடியா ராயினீர்
சந்தம் பரவு ஞான சம்பந்தன்
வந்த வாறே புனைதல் வழிபாடே.

திருச்சிற்றம்பலம்

— சம்பந்தசுவாமிகள்.

## திருச்சோற்றுத்துறைத் தலச் சிறப்பு

திருச்சோற்றுத்துறை காவிரியின் தென்கரையிலுள்ள 13-வது தலம். இது கௌதம ஆச்சிரமம் எனவும் வழங்கப்பெறும். திருவையாற்றினை உள்ளிட்ட சப்த ஸ்தானங்களில் ஒன்று. சப்த ஸ்தானங்களாவன:- திருவையாறு, திருப்பழனம், திருச்சோற்றுத்துறை, திருவேதிகுடி, திருக்கண்டியூர், திருப்பூந்துருத்தி, திருநெய்த்தானம் என்பன. பஞ்சகாலத்தில் வந்தடைந்த சிவனடியார்களைத் தன்னிடம் வைத்துக் காப்பாற்றிய தலம் என்பது வரலாறு. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிச்செய்த பதிகத்தில் "சிறந்தார் சுற்றம் திரு என்று இன்ன துறந்தார் சேரும் சோற்றுத்துறை" எனப் போற்றி இருப்பது காண்க. அருளாளர் என்னும் வேதியருக்கு அக்ஷய பாத்திரம் அருளிய தலம் என்பதும் வரலாறு. (இன்றும் ஒரு அந்தணச் செல்வர் தரிசனம் செய்யவரும் அடியார்களை உபசரித்து வருவதும் காணத்தக்கது.) சூரியன் இந்திரன் முதலியோர் பூசித்தது. "செங்கதிரோன் வணங்கும் திருச்சோற்றுத் துறையனே" என்பது நேரிசைப் பதிகம். சுவாமி ஸ்ரீ தொலையாச் செல்வர். சுந்தரர் தேவாரத்தில் 'தொலையாச் செல்வச் சோற்றுத் துறையே' எனத் தலத்தைப் போற்றியிருப்பது காண்க. அம்மை ஒப்பிலாவம்மை. சோறு அளித்ததுபற்றி ஓதனவனேசுவரர் எனவும், அன்னபூரணி எனவும் வழங்கவும்பெறுவர். கோயில் மிகப் பழமையானது. இரண்டு பிராகாரங்களையுடையது. இரண்டாவது பிராகாரம் இப்போது வாழைத்தோட்டமாக இருக்கிறது. கோயிலில் கௌதமர் வடிவம் காணப்படுகிறது. சுவாமி கோயிலுக்குத் தென்புறத்தில் அம்மைக்குத் தனியே கோயில் உண்டு. திருப்பாற்றுறையிற் போலவே இங்கும் சுவாமிக்கு வலப்பக்கத்தில் அம்மைக்குக் கோயில் அமைந்திருப்பது போற்றத்தக்கது. சுவாமி அம்மை இருவர் சந்நிதிகளும் கிழக்கு நோக்கியனவே. மூவர் பாடலும் பெற்ற சிறப்பினை யுடையது. இதற்குப் பதிகம் 6.

இருப்பிடம்: இது தஞ்சையிலிருந்து திருவையாற்றிற்குச் செல்லும் பாதையில் திருக்கண்டியூரிலிருந்து கிழக்கே 3 மைல் தூரத்திலுள்ளது.

— தருமபுர ஆதீன வெளியீடு

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்துசாதனம்

யாழ். கர ஞு புரட்டாதி மீ உகூ உ வெள்ளிக்கிழமை

## "பிச்சைச் சம்பளம்" பெறுவோர் தொகை அதிகமாம்

குருடர், செவிடர், மூடவர், சப்பாணிகள், விருத்தர், தீராநோயாற் பீடிக்கப்பட்டோர், அநாதர் முதலாகச் சொல்லப்பட்ட ஏழைகளுக்கு நாட்டின் வருவாயிலிருந்து மாசந்தோறும் எடுத்துக்கொடுக்க, அவர்கள் ஏற்றுக் காலம்போக்கும் பணத்தை இங்குள்ள மக்கள் "பிச்சைச்சம்பள"மென்றுசொல்லுவர்; பிச்சைச் சம்பளத்தின் தொகையும், இதனை மாசந்தோறும் பெற்றுச் சீவிக்கும் ஏழைகளின் தொகையும் காலந்தோறும் அதிகப்பட்டு வரலாயின; சென்ற ஆண்டிலுள்ள பிச்சைச் சம்பளம் பெறுவோர் தொகை 40000 மாகும், ஆனல் கழுமாண்டிலுள்ள ஏழைகன் தொகை எழுபதினயிர ய்விட்டதாம்; இன்னும் ஒரு பருந் தொகையினர் தங்களுக் ம் பிச்சைச்சம்பளம் உதவு ல்வேண்டுமென அதிகாரிக க்கு விண்ணப்பஞ்செய்துள்ளனராம்.

இவற்றின் பயனக இந்த 1951-ம் ஆண்டு தொடக்கம் 52-ம் ஆண்டு வரைக்கும் 9,000,000 ரூபா பிச்சைச் சம்பளமாகத் திட்டமிடப்பட்டிருக்கின்றதாம்; இப்படியான ஏழைகட்கு முந்தி உதவிவந்த பிச்சைச்சம்பளம் சராசரி 6 ரூபா வரையிருந்ததாம்; ஆனல் இப்பொழுது உணவுப் பொருள் முதலியவற்றின் விலை அதிகப்பட்டு வருதலினல் ஒராளுக்குச் சராசரி 10 ரூபாவிகிதமாக்கப்பட்டிருக்கிறது; முந்தி ஒரு ஏழைக் குடும்பத்திற்கு உதவப்பட்டுவந்த பிச்சைச் சம்பளம் சராசரி 10 ரூபா விகிதமாகும்; ஆனல் இப்பொழுது சராசரி 20 ரூபாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இப்படிப் பணத் தொகை விகிதம் அதிகப்படுத்திக்கொடுக்கப்பட்டாலும், இத்தப் பிச்சைச் சம்பளத்தினல் ஏழைகள் ஏதுந் திருப்தியடைந்ததாகப் புலப்படவில்லை; காரணம் உணவு உடைப் பொருள்களின் செலவு காலந்தோறும் ஏறியேறிக்கொண்டு வருதலேயாகும்; உடம்பைவிட்டு உயிர் நீங்காதபடி தடுப்பதற்கு ஒருவர்க்கு மிகவுங் குறைந்த விகிதம் நாளொன்றிற்கு ஒரு ரூபாவாக மாசம் 30 ரூபா வேண்டுமாம்; முப்பது ரூபாவிற்குப் பதிலாகப் பத்து ரூபா வழங்கப்படுமானல், எஞ்சிய 20 நாளைக்கும் இந்த ஏழை காலங்கழிப்பதெப்படி? இப்படியே, பெற்ருரையும் ஒரு பிள்ளையையுங் கொண்ட ஒரு குடும்பத்திற்குத் தானும் இப்பொழுது கொடுக்கும் 20 ரூபா ஒருவாற்ருனும் போதாதாகும்; அரசினருக்குக் கொடுத்தோமென்ற திருப்தியும் ஏழைகட்கு ஏற்ருேமென்ற சொல்லுமே யொழிய இந்த அற்ப தொகைப் பணங்கள் எவர்க்கும் நிசமான திருப்தி விளையாவெனலாம். அரசினரும் பொதுப் பணத்திலிருந்து இவர்களுக்கு இப்பொழுது வழங்குவதைக் காட்டிலும் அதிக தொகையை எடுத்துக்கொடுத்தலியலாது; பிச்சைச் சம்பளம் பெற்று வந்தவர்களுட் சிலர், அதனை ஏற்றுச் சீவிக்க வேண்டிய நிலையிலில்லாதவர் ஏதுந் தொழில் முயற்சிசெய்து உழைக்கத் தக்கவர்களெனக் காரணங்காட்டி, கொடுக்கப்பட்ட பணமுங் கொடுக்கப்படாது அறவே தவிர்க்கப்பட்டனர்; இப்படிச் செய்தாலும் இன்னும் குறித்தபணத்தின் தொகையும் ஏற்போர் தொகையும் அதிகப்பட்டே வருகின்றனவாம்.

இந்த விஷயத்தில் இந்தச் சுதந்திர இலங்கை யரசினர் யோசித்து ஆராய்ந்து செய்ய வேண்டியன சிலவுண்டெனலாம்; நாட்டின்பரிபாலனத்தை நடத்துவோரென்று சொல்லப்படும் மந்திரிமார் காரியதரிசிகள் மேற்சபையோர் அங்கத்தவர்கள் முதலானவர்களுக்கு அதிகமான வேதனத்தை வழங்கிவருகிருர்களென்ற அபவாதம் இந்நாட்டிலே என்றுமுண்டு; இந்தியாவிலே பரிபாலனப்பொறுப்பை யேற்றுள்ளவர்களெவர்க்கும், இலங்கையில் வழங்கப்படுவதுபோன்ற உயர்ந்தவேதனம் வழங்கப்படுவதில்லையாம்; ஆதலால் இவர்களுடைய மாசசம்மானத்தில் ஒரு குறித்த விகிதம் குறைத்துக் கொடுத்து, அதனல் எஞ்சும் பணத்தைப் பிச்சைச் சம்பளத்தோடு சேர்த்து ஏழைகட்கு வழங்கினல் ஏழைகளும் சற்று அதிக பயன் அடையக்கூடும்.

"வாங்குங் கவளத் தொருசிறிது வாய்
தூங்குங் களிற்ருே துயருறு(து) [தப்பின்
ஆங்கது கொண்(டு) ஊரு மெறும்பிங்
கொருகோடி உய்யுமால்ஆருங்கிளையோ
டயின்று"

அதாவது யானையானது(பாகனிடத்தில்) வாங்கியுண்ணுங் கவளவுணவில் ஒரு சிறிது தவறி நிலத்திலே சிந்திவிட்டால், அப்படிச் சிந்திய உணவையிட்டு யானை கவலைப்படாதாம்; ஆனல் அப்படிச் சிந்தப்பட்ட உணவைக்கொண்டு கோடிக்கணக்கான எறும்புகள் தங்கிளையோடு உண்டு உயிர் வாழ முடியும்.

இதுபோலவே, மேலான பரிபாலனப் பொறுப்பு வகித்திருப்போர் மாசந்தோறும் பெற்றுவரும் பெருந்தொகையானவேதனத்தில் ஒரு விகிதத்தைக் குறைத்து ஏற்ருல், அந்தத் தொகையைக்கொண்டு ஆயிரக்கணக்கான ஏழைகளைப் பசியினல் மாளாது பாதுகாக்கலாமென்கின்ருேம். மேலும் தொழில் செய்து பிழைக்கும் ஆற்றலில்லாத வயோதிகர் சப்பாணிகள் ஏனைய அங்கவீனர்களுக்குப் பிச்சைச் சம்பளம் வழங்கிக்கொண்டு, தொழில் செய்யத் தக்கவர்களுக்குப் பல தொழிற்றுறைகளைத் தம் பொறுப்பிலே தாபித்து அவ்வேழைகளுக்குத் தொழில் காட்டுதல் அரசினரைப் பொறுத்த கடனகும்.

## கோணேசர் திருவுருவங்கள்

திருக்கோணசலத் திருவுருவங்கள் யாழ்ப்பாணஞ் சைவ பரிபாலன ஆச்சிரம நாவலர் மண்டபத்தி லிருந்து மீண்டு போகும்போது, குறித்த மண்டபத்தில் ஆராதனை அன்னதானம் முதலியன நன்கு நடைபெற்றன; போகும் மார்க்கத்தில் நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு முதலாமிடங்களில் அபிமானிகள் மேற்படி மூர்த்திகளை அன்போடும் ஆநந்தத்தோடும் வரவேற்றனர்; சைவபரிபாலனசபை மண்டபத்தில் கடைசிகால் ஆராதனையும் அன்னதானமும் நடந்தபோது சாவகச்சேரிப் பகுதிப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. வி. குமாரசாமி இங்குவந்து இங்குள்ள அபிமானிகளோடு பெரிதும் ஒத்துழைத்து, மூர்த்திகளுடன் தாமும் சாவகச்சேரிக்குச் செல்லலாயினர்; ஆங்காங்கு மூர்த்திகள் எழுந்தருளச் செய்யப்பட்டபோதெல்லாம் திரு. குமாரசாமி தாமும் உடன்சென்ற அன்பர்கள் தரிசித்தற்காகிய ஒழுங்குகளைச் செய்தார்.

## காலநிலை

சென்ற செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தின் பல இடங்களில் மழை பெய்தது; இது பெருமழையல்லவெனினும் சில நாட்களாக வாடியிருந்த நெற்பயிருக்கு இதம் தருவதாம்; இன்னமும் மழை வேண்டும்.

## கோணேச மூர்த்திகள் திருவுலா

### கண்டி — கம்பளை நேரக்கிரமம்

13—10—51 சனி காலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை கண்டி சைவமகாசபை மண்டபத்தில் ஆராதனை, தரிசனம், தோத்திரம்பாடல். பிற்பகல் 3 மணி 5 நிமிஷம், நாகசுரக் கச்சேரி, கதாப்பிரசங்கம், பஜனை முதலியன.

14—10—51 ஞாயிறு காலை 7 மணிவரை, கட்டுக்கலைப் பிள்ளையார் கோயிலுக்கு எழுந்தருளச் செய்தல்; 8 மணிதொடக்கம் மத்தியானம் வரை தரிசனம்; பகல் 1 மணி — 2 மணிவரை கடுகண்ணவ தரிசனம்: 3 மணி தொடக்கம் பேராதனைக்குப் புறப்பட்டு $3\frac{1}{2}$ மணி தொடக்கம் $4\frac{1}{2}$ மணிவரை அங்குள்ள பௌத்த இளைஞர் சங்கமண்டபத்தில் தரிசனம். 5 மணி கம்பளைக்குப் புறப்படுதல்.

## வில்லூன்றியில் ஸ்ரீராமர் இலக்குமணர் முதலாம் மூர்த்திகள் ஸ்தாபனம்

யாழ்ப்பாணத்துள்ள வில்லூன்றியெனப்படும் புண்ணிய தீர்த்தத்தின் மேற்குக்கரையில் கிழக்குவாசலாக ஒரு கோயில் நவமாக அமைத்து, அதன்கண் சென்ற புதன்கிழமையாகிய விஜயதசமி புண்ணிய தினத்தன்று; ஸ்ரீ ராமர், இலக்குமணர், சீதாதேவி, அநுமார் என்னுமிவர்களுடைய திருவுருவங்கள் ஸ்தாபிக்கப்பெறலாயின. புண்ணிய தீர்த்தங்களில் மூழ்குவோர்க்குத் திருமால் தரிசனமும் வேண்டுமாதலின், அவரது அவதாரங்களுளொன்ருகிய ஸ்ரீராம தரிசனமும் வேண்டற்பாலதாம்; மேலும், ஸ்ரீராமபிரான் இராவணசம்மாரஞ் செய்ய இங்கு வந்த காலத்து அவருடைய பரிவாரங்கள் நீர் வேட்கைகொண்டு பிரானை வேண்ட, அந்தப் பிரான் இக்கிலயத்தில் தமது வில்நுதியால் ஊன்றி இத் தீர்த்தத்தைச் சுரக்கச் செய்ய, அவர் பரிவாரங்கள் நீர்பருகிச்சாந்தியெய்தினவெனவும் அக்காலந்தொட்டு இது "வில்லூன்றி" யென்னும் பெயருடன் புண்ணிய தீர்த்தமாக வழங்குகின்றதென்பது ஐதிகம்; வருசப்பிறப்பு, ஆடி, தை, மாசிமாசங்களில் நிகழும் அமாவாசைகள், கிரகண புண்ணியகாலங்கள் ஆகிய விசேஷ காலங்களில் சைவ அன்பர்கள் பலர் இத் தீர்த்தத்தில் மூழ்கி வில்லூன்றி விநாயகப்பெருமானைத் தரிசித்து அருள்பெற்றுச் செல்வர்; நவமாக அமைக்கப்பெற்ற ஸ்ரீராமசாமி கோயிலும் மேற்படி மூர்த்திகள் ஸ்தாபனமும் வில்லூன்றிப் பிள்ளையார் கோவிலதிகாரியாகிய திரு. இராசரத்தினத்தின்முயற்சியாலாயினவென அறியலானேம்.

## நீதிதல நிந்தாட்சணை வழக்கு

### பத்திராதிபருக்கு அபராதம்

கொழும்பில் வாரந்தோறும்வெளிவரும் ஆங்கிலபத்திரிகையாகிய "பீப்பிளஸ் வொயிஸ்" என்னும் வெளியீட்டின் ஆசிரியரும், பிரசுரகர்த்தாவுமாகிய திரு. K. வைகுந்தவாசன் என்பவர் நீதிதல நிந்தாட்சணையெனுங் குற்றத்தின் பேரில் நீதியரசர் மூவரால் விளங்கிக் குற்றவாளியெனக்கண்டு 250 ரூபா அபராதம், இறக்கத்தவறினல் 6 வாரக் கடுஞ்சிறை விதிக்கப் பெற்ருர்.

## கோட்டை வட்டாரத்தில் சாராயம்

### விற்பதையிட்டு அபிப்பிராயபேதம்

கொழும்பு கோட்டையிலும் புறக்கோட்டையிலுமுள்ள விடுதிச்சாலைகளின் சொந்தக்காரர் தங்கள் தாபனங்களிற் சாராயம் விற்க அனுமதி பெற முயலுகின்றனர். இதையறிந்த மதுவிலக்குத் தொண்டர் அனுமதி கொடுத்தலை எதிர்த்து உள்நாட்டு விவகார மந்திரிக்கு மனுப்பண்ணியிருக்கின்றனர். புறக்கோட்டை வட்டாரத்தில் அங்குள்ளவர்களின் வாக்குரிமையின்படி மதுபானம் அகற்றப்பட்டு விட்டமையாலும், கோட்டை வட்டாரத்தில் சாராயக் குதங்கள் இல்லாமையாலும் இவ்விரு இடங்களிலும் சாராயவிற்பனையை அனுமதிப்பது மதுபானப் பகுதியாரின் சட்டங்களுக்கு விரோதமாயிருக்குமென புறக்கோட்டை மதுபான விலக்கு இயக்கத்தின் நிருவாக காரியதரிசியாகிய திரு. R. பிரேமதாச என்பவர் உள்நாட்டு விவகார மந்திரிக்கு எடுத்துக்காட்டி விண்ணப்பித்திருக்கிருர்.

## கேள்விப் பத்திரங்கள்

### (Tenders)

முல்லைத்தீவு ஐக்கிய விளைபொருள் விற்பனவுச் சங்கத்துக்குத் தானியங்கள் சேமித்து வைக்கும் பண்டசாலைக் கட்டடம் ஒன்று கட்டுவதற்கு ஒப்பந்தக் கேள்விப் பத்திரங்கள் அனுப்ப விரும்புவர்கள் இந்த 1951-ம் ஆண்டு அக்ரோபர் மாதம் 30-ந் தேதி பகல் 2½ மணிக்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவேண்டுமென வடமாகாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவுகாரியஸ்தர் கேட்டுக்கொள்கின்றனர்.

ஒப்பந்த விண்ணப்ப மாதிரிப்பத்திரங்கள் யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவுகாரியஸ்தரின் கந்தோரிற் பெற்றுக்கொள்ளவேண்டும். குறித்த பதிவுகாரியஸ்தரிடமிருந்தே மேற்படி கட்டடத்தின் விபரம் முதலியன அறியலாகும். கட்டடத்தின் படம் மேற்படி கந்தோரிற் பார்க்கலாம். கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளா யிருக்கவேண்டும். மேலும் எந்தக் கச்சேரியிலாயினும் ஐம்பது ரூபா கட்டிப் பெற்ற பற்றுச் சீட்டைக் கொடுத்து ஒப்பந்தமாதிரிப் பத்திரங்களை 24-10-51-ந் தேதி 4½ மணிக்குப் பிந்தாமல் குறித்த பதிவுகாரியஸ்தரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பந்த கேள்விப் பத்திரகாரர் தாங்கள் ஏற்கும் வேலை ஒப்பந்தத்தைத் தவணை தப்பாமல் முடித்துக் கொடுக்கும் திறமை முதலியவற்றில் மேற்படி பதிவு காரியஸ்தரைத் திருப்திப்படுத்த வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் சொல்லப்பட்ட நிபந்தனைகளுக்கிணங்க முறைப்படி எழுதிச் 'சீல்' இட்டுக் காரியஸ்தருக்கு அனுப்பப்பட்டாலொழிய கேள்விப் பத்திரத்தின்பொருட்டுக் கட்டப்பட்ட பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

R. C. S. Cooke.
யாழ்ப்பாண ஐக்கிய சங்கங்களின் உதவிப் பதிவு காரியஸ்தர்.

ஐக்கியசங்கக் காரியாலயம்,
யாழ்ப்பாணம்,
8-10 51
110 12, 16, 19—10—51

## சரஸ்வதி பூசை

மாதகல் மேற்கிலுள்ள பாரதி வாசகசாலை மண்டபத்தில் ஐக்கிய சமூகசங்க ஆதரவிலும் பொதுசனங்களின் ஆதரவிலும் நவராத்திரிபூசை கிரமமாக நடைபெற்று வந்து, செவ்வாய்க் கிழமை சரஸ்வதிபூசை விசேடமாக நடைபெற்றது. தேவாரம் பாடிய சிறுவர்கட்கு வழிபாட்டிற்குரிய சிறு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

— கடித

## சர்வசமய மகாநாடு

1952-ம் ஆண்டின் முற்பகுதியிற் சென்னையிலே ஓர் சர்வசமய மகாநாட்டைக் கூட்டுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் நடைபெறுகின்றனவாகவும், தெய்வநெறிக் கழகத் தலைவரான சுவாமி சிவானந்தரின் தலைமையில் நடைபெறுமெனவும் இந்த மகாநாட்டில் உலகின் பல பாகங்களிலுமுள்ள பல மதத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இதிற் கலந்து கொள்வார்களெனவும் அறிவிக்கப்படுகிறது.

## நமது சோதிடப்பகுதி

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது

### உங்களுக்குரிய இந்தவாரப் பலன்கள் (14-10-51—20-10-51)

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

வாரத்தின் முற்பகுதி அற்ப கஷ்டத்தோடு கூடியது; சிநேகரோடு பிணங்கக்கூடும்; பிற்பகுதியிற் பண லாபமுண்டு; பார்க்கும் முயற்சியிற் சித்தியுண்டு; ஆனல் மன ஆறுதலும், குடும்பச் சந்தோஷமுமில்லை.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம்கால்கள் ரோகிணி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்

வியாழக்கிழமைவரை பிரதான முயற்சிகளில் தலையிட வொண்ணுது; தேகசுகமும் வரவேண்டும்; குடும்ப சந்தோஷம் உற்றுருறவினர் மகிழ்ச்சியுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

இந்தக் கிழமை சிநேகராலதிக உதவியுண்டு; சகோதரங்களாற் சந்தோஷம் கிட்டும்; வியாழக்கிழமை முதற் சில காலத்துக்குத் தேகசுகத்தைப் பேணுக.

**கடகராசி** புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம்.

வரவுக்கு மேற்பட்ட செலவுண்டு; ஞாயிறு திங்கட் கிழமைகளில் நல்லகருமஞ் செய்யலாம்; உத்தியோக உயர்ச்சி சில காலத்துக்குத் தாமதமாகும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம், 1-ம் பாதம்.

வாரத்தின் முற்பகுதியிற் சங்கடங்கள் ஏற்படக்கூடும்; சுற்றபந்துக்களுக்கிடையே இழவு சேரவுங்கூடும்; வியாழக்கிழமைக்கு மேற் சுபகாலம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4-ம் பாதம் அத்தம், சித்திரை 1, 2-ம் பாதம்.

நற்கருமஞ் செய்ய ஞாயிறும் திங்கள் முற்பகலும் வாய்த்த காலம்; திங்கட்கிழமை பிற்பகல் தொடக்கம் புதன்கிழமை முடிய அவதானமாக நடந்துகொள்ளவும்; எஞ்சிய நாட்கள் செய்யும் முயற்சிக்கு அநுகூலமானவை; தேகசுகத்தையும் அவதானித்துக் கொள்க.

**துலாம்** சித்திரை 3, 4-ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3-ம் பாதம்.

புதிய பொறுப்புக்களை ஏற்கவேண்டிவரும்; மனச்சஞ்சலமும் பொருள் நஷ்டமுமுண்டு; வியாழன் தொடக்கம் சனிக்கிழமை காலைவரை ஏதும் கஷ்டங்கள் நேரக்கூடும்; சாவதானமாக நடந்து கொள்க.

**விருச்சகராசி** விசாகம் 4-ம் பாதம் அனுஷம், கேட்டை.

தாய்வழியாரால் மனக்கிலேசமும் பொருட் செலவும் நேரும்; பொருளை அவதானமாகப் பேணுக; எவரையும் நம்பி மோசம்போக வேண்டாம்; கருமங்களைத் தாம்தாமே நேரிற்செய்தல் நன்று.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1-ம் பாதம்.

பார்க்கும் உத்தியோகத்திலும் செய்யும் முயற்சியிலும் சித்தியுண்டு; ஸ்திரீ ராத லாபம், பகைவர்கட்கு வீழ்ச்சியுண்டாம்; ஆனல் சித்த சமாதானமில்லை.

**மகரராசி** உத்தராடம் 2 3 4-ம் பாதம் திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்

பொருள் விஷயமாகச் சிறிது விருத்தியுண்டு; எடுத்த கருமங்களை இப்போதைக்கு நிறைவேற்ற முடியாது; நண்பர் உற்ற சமயத்திற் கைவிடுவர்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4-ம் பாதம் சதயம், பூரட்டாதி 1-ம் 2 ம் 3-ம் பாதம்

வாரத்தின் முற்பகுதியில் சில சங்கடம் நேரும்; ஆனல் வியாழக்கிழமையின் பின் நல்ல காலம்; ஆண்களுக்குப் பெண்களாலும் பெண்களுக்கு ஆண்களாலும் உதவியுண்டு.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

இடையிடை சில பிணக்கு நேர்ந்தாலும் இந்த வாரம் நன்மையாய் முடியும்; திட்டப்படி கருமஞ்செய்தாற் சித்தியுண்டு; விபரீத விளக்கம் காரணமாகக் கிழமை முடிவிற் பழிசொல் நேரும்.

## அரசாங்க பாஷைக் கமிஷன்

### இரண்டாவது அறிவித்தல்

அரசாங்க பரிபாலன கருமங்களில் சிங்களத்தையும், தமிழையும் உத்தியோக பாஷைகளாக உபயோகிக்க வேண்டுமென்று விரும்பப்பட்டமையால், ஆங்கிலத்துக்குப் பதிலாகச் சிங்களத்தையும் தமிழையும் உபயோகிக்கச் செய்வதற்கான ஆலோசனைகளைக் கூறுவதற்காக, இலங்கை அரசாங்கசபையார் அச் சபை அங்கத்தவர்களிற் சிலரைத் தெரிந்தெடுத்து ஒரு சபையை அமைத்தனர். மேற்படி தெரிவுச் சபையினர், 1951ம் ஆண்டில் XX 11 ம் அறிக்கை பிரசுரமாகப் பிரசுரிக்கப்பட்ட ஒரு விஞ்ஞாபனத்தில் அரசாங்க பரிபாலன கருமங்களில், சிங்கள, தமிழ்ப் பாஷைகளை உபயோகிப்பதற்கான யோசனைகள் சிலவற்றைக் கூறியுள்ளனர்.

கீழ்க் காணும் விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து அறிவிப்பதற்கும், யோசனை கூறுவதற்குமாக, அதி உத்தம மகா தேசாதிபதி யவர்களால் அரசாங்க பாஷைக் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது.

1. தெரிவுச்சபையார் யோசனை கூறியுள்ள காரியங்களில் அவசியமானவையென்றும், காரியசாத்தியமானவையென்றும், கருதப்படும் காரியங்களைச் செய்வதற்குக் கையாளவேண்டிய காரியக்கிரமம்.

2. அந்த நோக்கத்தை அடைவதற்குச் செய்யவேண்டிய வேறு ஏதும் காரியங்களும், அத்தகைய வேறு காரியங்களைச் செய்வதற்குக் கையாளவேண்டிய காரியக்கிரமமும்.

3. அந்த நோக்கத்தை அடைவதற்கு, சகலமான அரசாங்க பகுதிகளினதும், அல்லது ஏதாவது சப் பகுதிகளில் ஏதாவது ஒன்றின் அல்லது பலவற்றின் பரிபாலனத்தின் கொள்கையிலேனும், அல்லது பிற விஷயத்திலேனும் செய்ய வேண்டிய மாற்றங்கள் ஏதேனும்,

இக் கமிஷன், மேற்படி விஷயம்பற்றி ஒரு ஆரம்ப ஆராய்ச்சி நடத்திய பின்னர், பொதுஜனங்களின் தேவைகளை உடனே, துரிதமாக நிறைவேற்றக்கூடிய பல்வேறு அரசாங்க பகுதிகளை, அவற்றின் முதன்மைக்கிரமப்படி, விருத்தாந்தமாகக் கவனிக்கத் தீர்மானித்திருக்கின்றது. இது ஏற்கனவே ஒரு சில அரசாங்க பகுதிகளுடன் சம்பந்தம் வைத்து வந்திருக்கின்றது. மேலும், அவற்றைப்பற்றிய, கமிஷனின் சிபார்சுகள், உரிய காலத்தில் செய்து வைக்கப்படும். தற்பொழுது பின்வருவனவற்றுடன் சம்பந்த மேற்படுத்துவதெனத் தீர்மானித்திருக்கின்றது.

1. கடற்றொழில் பகுதி.
2. தொழிற் பகுதி.
3. விற்பனவு வசதிப் பகுதி.
4. மாகாணங்களிலும், அரசிறைப் பகுதிகளிலும் உள்ள கச்சேரிகள்.
5. சமூக சேவைப் பகுதி.

பொதுஜனங்களுக்கு, அதிக திறமையானதும், சிறப்புவாய்ந்ததுமான சேவையைப் பெற்றுக்கொடுக்குமுகமாக, மேற்கூறிய அரசாங்க பகுதிகள் எதிலாவது,

(அ) இயன்றளவு கெதியாகச் சிங்களத்தையும், தமிழையும் உபயோகத்துக்குக் கொண்டுவரக்கூடிய விஷயங்களையும் அதற்கான வழிவகைகளையும்,

(ஆ) கந்தோர்முறையில் அல்லது கருமத்தில் செய்யவேண்டிய ஏதும் மாற்றங்களையும், அல்லது உண்டுபண்ண வேண்டிய ஏதும் விசேஷ வசதிகளையும், அல்லது புதுமுறைகளையும்பற்றிய பொதுஜனங்களின் அபிப்பிராயங்களையும் விருப்பங்களையும் இக்கமிஷன் வரவேற்கிறது.

1951 ம் ஆண்டு ஜுலைமாத முற்பகுதியில், பிரசுரமான உள்நாட்டுப் பத்திரிகைகளில் வெளியான, 1951ம் ஆண்டு ஜுன் மாதம் 30ந் திகதியைத் தாங்கிய எங்கள் முதல் விளம்பரத்தைத் தொடர்ந்து இந்த விளம்பரம் பிரசுரிக்கப்படுகின்றது.

தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவிக்கவோ, அன்றேல் ஆலோசனைகளைக் கூறவோ விரும்பும் பொது ஜனங்கள், அந்த அபிப்பிராயங்களை அல்லது ஆலோசனைகளை எழுதி விஞ்ஞாபன ரூபத்தில், 1951 ம் ஆண்டு அக்டோபர் (ஐப்பசி) மாதம் 31ந் திகதி புதன் கிழமைக்கு முன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தேவைப்படினும், தேவையேற்படும் பொழுதும்மாத்திரமே வாய்மொழியான முறைப்பாடுகளைக் கேட்பதற்கு ஒழுங்கு செய்யப்படும்

கமிஷனின் உத்தரவுப்படி,
என். டி. விஜயசேகர
காரியதரிசி.

அரசாங்க பாஷைக்
கமிஷனின் காரியாலயம்,
முதலாம் மாடி, வலதுபுறம்
புதிய "ரோயல்" கல்லூரி மண்டபம்,
(த. பெ. கிர். 598)
கொழும்பு 7. செப்டெம்பர் (புரட்டாதி)
27, 1951.
G. 35 2, 12-10-51.

## விளம்பரம்

யாழ்ப்பாணம் றெக்குவஸ் கோடு

1. யாழ்ப்பாணம் கதிரவேலு குமரைப் [பிள்ளை
2. ,, A. மரியாம்பிள்ளை [செல்வத்துரை
3. ,, பேதுருப்பிள்ளை [அந்தோனிப்பிள்ளை
4. ,, நீக்கிலாப்பிள்ளை [மூத்ததம்பி சவிரிமுத்து
5. ,, P. D. சவிரிமுத்து
6. ,, V. J. மனுவேற் [பிள்ளை,

இல- 2370/A Vs வாதிகள்.

யாழ்ப்பாணம் பெரியதெரு. ரேஸ் ஆட்ஸ்ருடியோ - யோண் பிலிப்பு யோசேப்

பிரதிவாதி.

யாழ் நகர கஷ்ட நிவாரண பாதுகாப்புச் சங்க அங்கத்தவர்களுக்கு.

இதனுல அறிக - மேற்சொல்லிய வாதிகளினுல் தாம் யாழ்நகர கஷ்ட நிவாரண பாதுகாப்புச் சங்க அங்கத்தவர்கள் என்ற முறையிலும் குறித்த சங்கத்தின் இதர அங்கத்தவர்கள் சார்பாகவும் 1950 - ம் ஆண்டு ஆடி மாசம் 30-ந் திகதி 12×10 அளவில் சங்க அங்கத்தவர்களின் பிரதிமைப்படம் எடுப்பதற்குச் செய்து கொண்ட ஒப்பந்தப்படி எடுக்கப்பட்ட படத்தைக் கொடாதபடியால் மேற்சொல்லிய பிரதிவாதிமீது தாட்டம் ரூபாய் 65/= கொடுத்த ரூபாய் 35/= ஆக மொத்தம் ரூபாய் 100/= அறவாக்க இவ் வழக்குத் தொடரப்பட்டு இருக்கின்றது.

குறித்த சங்க அங்கத்தவர்கள் சார்பாகப் பிரதிவாதிமீது வழக்குத் தொடர மேற் சொல்லிய வாதிகளுக்கு இந்தக் கோடு 1951-ம் ஆண்டு ஆவணி மாசம் 2 - ந் திகதி, அனுமதி அளித்திருக்கின்றது.

கோட்டின் ஆணைப்படி
S. சிவசிதம்பரம (ஒப்பம்)
யாழ்ப்பாணம் றெக்குவஸ் கோட்டு
பிரதம லிகிதர்
7 - 8 - 51.

தயாரித்தது
ALFRED SWAMPILLAI
வாதிகளின் புரக்டர்.
M 90 12, 15—10—51.

## திருவடி

1-ம் பக்கத் தொடர்ச்சி

திருச்சிற்றம்பலம்

ஆரவணையான் சிந்தித் தரற்றும் அடி
அருமறையான்சென்னிக்கணியாம்அடி
சரவணத்தான் கைதொழுது சாரும் அடி
சார்ந்தார்கட்செல்லரம் சரணும் அடி
பரவுவார் பாவம் பறிக்கும் அடி
பதினெண் கணங்களும பாடும் அடி
விரவுசீர்த் தெனகெடில நாடன் அடி
திருவீரட் டானத்தெம் செல்வன் அடி
திருச்சிற்றம்பலம்.

இனி மற்றென்று. அப்பரடிகள் திருச்சத்திமுற்றத்திற் சிவக்கொழுந்தைப் பணிந்தார். 'கோவாய் முடுகி' என்றெடுத்துப் பாடுகின்றார். பாட்டில் என்ன விண்ணப்பிக்கின்றார்? 'கூற்றம் துமைப்பதன் முன் பூவாரடிச்சுவடு என்மேற்பொறித்துவை, என்று. உடனே 'நல்லூரிலவா' வா' என்ற ஆணை பிறந்தது. அங்குச் சென்றார், திருவடி சூட்டப்பெற்றார். அங்குப் பாடிய பாடல் ஒவ்வொன்றும் திருவடிப் பெருமையை அறிவிக்கின்றது.

## ரேடியோ

* இசைத்தட்டு

**திருச்சி சனி அக் 13**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 டி பி சிவன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

1 நீங்கள் கேட்டவை 1-40 ஹிந்தியில் 1 50 உயர்தரப்பள்ளிகளுக்கு 2 தமிழில் செய்தி 2 10 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 25 சித்ரகானம் 2 45 முடிவு.

5 30 புல்லாங்குழல் ஆ இ ரே வித்வான் 5 45 இசைப் பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்ய கோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ரகானம்* 7 45 திருப்பாம்புரம் என் சுவாமிநாதபிள்ளை புல்லாங்குழல் 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கவிச்சொல் கேதீர் 9 30 சகாதேவ் ப்ரஸாத் 10 முடிவு.

**திருச்சி ஞாயிறு அக். 14**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 இசைச்சுவடி 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம் * 8 30 முடிவு.

12 சித்ரகானம் 12-30 சூர்ய காந்தி சதம்ப நிகழ்ச்சி 1 மணிமலர் 1-30 வாத்ய இசை 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வகை 2 தமிழில் செய்தி. 2 10 பெண்ணுலகம் 2-30 செண்டு இசை நிகழ்ச்சி 3 முடிவு.

மாலை 5 30 டி. பாலம்மாள் வீணை 5 45 எல். என். ஸோமயாஜுலு பாட்டு 6 05 அறிவிப்புகள் 6 10 நீங்கள் கேட்டவை 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 ஜீவித நௌகா* 7 45 நாட்டுப்பாடல் 8 டி ஏ காகசாமி பாகவதர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 டி பாலம்மாள் வீணை 10 முடிவு.

**திருச்சி திங்கள் அக்டோபர் 15**

காலை 7 10 ஆரம்பம் 7 15 தமிழில் செய்தி 7 30 கல்விடைக் குறிச்சி ஏ. பாலசுப்பிரமணிய பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8 15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12 30 உயர்தரப் பள்ளிகளுக்கு 1 நீங்கள் கேட்டவை 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 மன்னார்குடி கே. சாவித்திரி அம்மாள் கோட்டு வாத்தியம் 2 தமிழில் செய்தி 2 10 நாட்டிய சங்கீதம் 2 15 உயர்தரப் பள்ளிகளுக்கு 2 45 முடிவு.

மாலை 6 ஆரம்பப் பள்ளிகளுக்கு 4-30 முடிவு 5 30 வி. ராஜாராமய்யர் வயலின் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 திருச்சி ரேடியோ வாத்யகோஷ்டி 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில் செய்தி 7 30 சித்ர கானம் 7 45 மீன் பிடித்தல் 8 வி. ராஜாராமய்யர் வயலின் 8-30 ராதா ஜயலக்ஷ்மி 8 45 ஆங்கிலத்தில் பேச்சு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 கல்விடைக் குறிச்சி ஏ. பாலசுப்பிரமணிய பாகவதர் பாட்டு 10 முடிவு.

**திருச்சி செவ்வாய் அக் 16**

காலை 7 10 ஆரம்பம்* 7 15 தமிழில் செய்தி 7 30 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்தி 8-15 சித்ரகானம்* 8 30 முடிவு.

12-30 உயர்தரப்பள்ளிகளுக்கு 1 இசை வேளை * 1 40 ஹிந்தியில் செய்தி 1 50 குரல்வகை * 2 தமிழில் செய்தி 2 10 சாக்ஸபோன், வாத்ய கோஷ்டி 2 15 2 45 முடிவு.

மாலை ஆரம்ப பள்ளிகளுக்கு 4 30 ஒலிபரப்பு முடிவு. 5 30 வெள்ளனூர் கல்லையாபிள்ளை நாகஸ்வரம் 5 45 இசைப்பயிற்சி 6 05 அறிவிப்புகள் 6 10 வைதேகி ராஜகோபாலன் பாட்டு 6 30 கிராம நிகழ்ச்சிகள் 7 15 தமிழில்செய்தி 7 30 சித்ரகானம் 7 45 ஆலத்தூர் சகோதரர்கள் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்தி 9 15 வெள்ளனூர் கல்லையாபிள்ளை நாகஸ்வரம் 10 முடிவு.


இலங்கையின் மிகப் பெரிய

— நகை —

வியாபாரிகள்

=o=

தந்தி: "JEWELLERS"

போன்: 161.

கிளைத்தானம்:

63, கன்னாதிட்டி,

யாழ்ப்பாணம்.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை.**

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எசசந்தி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து எற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49



# சாலாமிஸ்ரி லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல, புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக்குறைவு, சூலை, சத்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கும். தேகபுஷ்டி, வஜ்ரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருருத்தல் விலை ரூபாய் 25-00, அரைருத்தல் விலை ரூபாய் 12-50
கால்ருத்தல் விலைரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி; மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்

**சிவஞான பற்பொடி**

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய்நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல, பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

K. ஆறுமுகம்பிள்ளை

எமதுவிலாசம் நி 3/11 தட்டாதெரு
கோட்டைமுனை, மட்டக்களப்பு

M 92



வந்திருக்கின்றன! வந்திருக்கின்றன!!

# திறமான தேக்கமரங்கள்

பல தினிசுகளிலும் வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்

74 ஆஸ்பத்திரி ரோட்

யாழ்ப்பாணம்

Std 2


## மலிவான இந்திய துணிகள்

### அமெரிக்காவிலிருந்து வருமாம்

இப்போது இங்கே இந்திய காசிக்கன் துணி (54 அங்குலம் வீதியுள்ளது) யார் ஒன்று ரூபா 2 சதம் 40 ஆக விலைப்படுகிறது. இதே அகலமுள்ள இந்திய காசிக்கன் துணியை அமெரிக்கன் வியாபாரிமார் யார் ஒன்று ரூபா 1 சதம் 75 வீதம் ஏற்றுமதி செய்யச் சித்தமாயிருக்கின்றனராம். இக் கொள்வனவை ஒழுங்கு செய்யும் எம் நாட்டு வியாபாரிமார் பணப்போக்கு வரவுக்கட்டுப்பாடுகளின நிமித்தம் முடிவான ஒழுங்குகள் செய்து கொள்ள இயலாதிருக்கின்றனர். இந்திய அரசாங்கம் துணி ஏற்றுமதியைக் கட்டுப்பாடுசெய்வதற்குமுன் அமெரிக்க வியாபாரியாரால் இத்துணி இந்தியாவில் வாங்கப்பட்டது. அமெரிக்க வியாபாரிமார் இந்தியாவிடமும் யப்பானிடமும் துணிகளை வாங்கி அவற்றை வர்ண அச்சிட்டு மீண்டும் ஏற்றுமதி செய்தல் வியாபார நடைமுறையிலுள்ள ஓர் வழக்கமாகும். இந்திய காசிக்கன் துணியை அச்சடித்தல் இப்போதுள்ள வர்த்தக நிலைமையில் இலாபகரமாயிருக்காதென அமெரிக்க வியாபாரிமார் கருதுகின்றனர். ஆகையால் அத்துணியைக் கொள்விலையினுங் குறைந்தவிலைப்படி ஏற்றுமதிசெய்ய அவர்கள் விரும்புகின்றனராம். ஏற்றுமதி செய்யக்குமொத்தமாய் 67,000 யார் துணி இருக்கிறது. இதில 25,000யார் 54 அங்குலம் வீதியுள்ளது. மற்ற 4-,000 யாரும் 64 அங்குலம் வீதியுளளது. தங்கப்பவுண் நாணயங்கள் வழங்கும் தேசங்களிலிருந்து வரும் பொருள்களுக்கு "டலர்" நாணயங்களில் விலை கொடுக்கவொண்ணாதென்பது தங்கள் கட்டுப்பாடுகளிலொன்றெனப் பணப்போக்குவரவுப் பகுதித் தலைவர் கூறுகின்றனர். இத்துணியை இந்தியாவிடம் வாங்குவதற்கு அமெரிக்க வியாபாரிமார் "டலர்" நாணயத்தில் விலைகொடுத்தார்களென்பதை அத்தாட்சிப்படுத்தினுல் நம நாட்டு வியாபாரிமார் இத துணியை அமெரிக்கரிடம் வாங்க அனுமதியளிக்கப்படுவரென அறியக்கிடக்கிறது.

## மன்வர் இலங்கை விஜயம் நடவாதாம்

அவுஸ்திரேலியா நியூசிலன்ட், இலங்கை என்னும் நாடுகளை அடுத்த வருடத்தில் விஜயஞ் செய்வதென உத்தேசித்திருந்த ஜோர்ஜ் மன்னரின் பிரயாணம் நடைபெறுதாம. மன்னருக்குப் பதிலாக எலிசபெத் இளவரசியும் அவரது கணவன், எடின்பரோ கோமகனும் வருவார்களாம். அரசரின் உடல்நிலை திருப்திகரமாய் வருகிறதெனினும் சமீப காலத்தில் இப்பிரயாணத்தை மேற்கொளளுதல் அபாயகரமானதென அரசரின வைத்தியர்கள்கூறி பிரயாணத்தைத் தடுத்துவிட்டனராம்.


L. K. S. LEBBAY BROS
GOLD HOUSE

தற்காலத்திற்கேற்ற
நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ். லெப்பை பிரதஸ்,
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


Printed and Published by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245, Navalar Road, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Perakasa Press, Vannarponnai, Jaffna, on Friday October 12, 1951